Registered as a Newspaper

புதன் பொய்கை

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 11

புதன்கிழமை 07 டிசெம்பர் 2022

கார்த்திகை 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## தமிழர்களுக்கான தீர்வென்பது உள்ளகப் பொறிமுறையிலேயே

### பிரதமர் தினேஷ் வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 7
இலங்கை ஓர் இறைமையுள்ள ஜனநாயக நாடு. தமிழர்களின் பிரச்சினைக்கு உள்நாட்டில் பகிரங்கமாகப் பேசித்தான் தீர்வைக்காண முடியும். சர்வதேசம் மூலம் »15

## ரணிலுடன் இணையாவிட்டால் சஜித்துக்கு எதிர்காலமில்லை

### அமைச்சர் ஹரின் ஆருடம்



கொழும்பு, டிசெ. 7
ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும். ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படாவிட்டால் சஜித் பிரேமதாஸவின் »15

போதைத் தடுப்புச் செயற்றிட்டம்

# வடக்குப் பாடசாலைகளில் இனித் திடீர்ச் சோதனைகள்

### பொலிஸார் அறிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 7**

**போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் வடக்குப் பாடசாலைகளில் இனிவரும் நாள்களில் திடீர்ச் சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.** »10



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில்

## கார்த்திகை உற்சவம் நேற்றுப் பக்திபூர்வம்

யாழ்ப்பாணம், டிசெ. 7
யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற்சவம் நேற்று மாலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. »15

## கடன் மறுசீரமைப்பு விடயம் பேச்சுக்கு வருகின்றது சீனா

கொழும்பு, டிசெ. 7
வெளிநாட்டுக் கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மற்றும் ஏனைய நாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் தலைவர்களை சீனா அழைத்துள்ளது என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. »15

## அந்நியச் செலாவணிதான் நாட்டுக்கு மீட்சியைத் தரும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 7
பழமையான பொருளாதார முறைமையை கையாள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது. இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தேவைப்படுவது வெளிநாட்டு அந்நியச்செலாவணியே - இவ்வாறு ஜனாதிபதி »13

## நலிவு நிலையில் இலங்கை அங்கீகரித்தது உலகவங்கி!

கொழும்பு, டிசெ. 7
இலங்கையில் பொருளாதார நலிவு நிலையை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.
பொருளாதார நலிவு நிலையை அடுத்து இலங்கை பல தரப்புகளிடமும் கடன்களையும் »15

சீனாவின்

## மருத்துவ நன்கொடை நாட்டை வந்தடைவு!

கொழும்பு, டிசெ. 7
சீனாவால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள 2 பில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தன. »10

## விவசாய நெருக்கடியை உடனடியாகத் தீருங்கள்

### இல்லையேல் நிலை மோசமாகும் மைத்திரிபால எச்சரிக்கை


கொழும்பு, டிசெ. 7
விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழு நாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர்கொண்டுள்ளார்கள். விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு விரைவான தீர்வைக் காணாவிட்டால் நாடு மேலும் மோசமான விளைவை எதிர்கொள்ளும் - இவ்வாறு முன்னாள் ஜனாதி »15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க கோரி ஆர்ப்பாட்டம்













யாழ்ப்பாணம், டிசெ.7

அத்தியாவசிய மருந்துப் பொருள்களையும், மருத்துவ சாதனங்களையும் தட்டுப்பாடின்றி வழங்கக்கோரி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு – கிழக்கு பெண்கள் ஒன்றியத்தால் இந்த ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம்**

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக்கூடிய பெண்கள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாட்டையும், மருந்துவ சாதனப் பற்றாக்குறையையும் உரிய தரப்பினர் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

**வவுனியா**

மருந்துப் பொருள்களின் விலையேற்றம், மருத்துவ சாதனங்களின் தட்டுப்பாடு என்பவற்றைக் கண்டித்து வவுனியா, ஓமந்தையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

குருமன்காட்டுச் சந்தியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பதாகைகளை ஏந்தியாவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அரச மருத்துவமனைகளில் மருந்தைப் பெற முடியாதுள்ளது என்றும் தனியார் மருத்தகங்களில் அதிக விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றது என்றும் குற்றஞ்சாட்டிய அவர்கள், உரிய தரப்பினர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

**மன்னார்**

மன்னார் நகர சுற்றுவட்டத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மருந்துவ சாதனங்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். மருத்துகள் தட்டுப்பாட்டால் எல்லைக்கிராமங்களில் வாழும் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(எ-125,110,113,213,60,20)

## உடைமையில் கசிப்பு ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 7

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராயில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த தகவலுக்கமைய கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த 38 வயதான நபர், ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(எ-14,125)

## பெண்ணின் தங்கச் சங்கிலி கோப்பாயில் வழிப்பறி

யாழ்ப்பாணம், டிசெ.7

காலையில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் நடந்துள்ளது.

மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் ஒன்றே கால் பவுண் தங்கச் சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எ-125)

*நாடாளுமன்றில்*

## 2023இன் முதல் அமர்வு எதிர்வரும் ஜனவரி 17இல்

2023 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் 10 ஆம் திகதியை முழு நாளும் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அன்றையதினம் சபை கூடாது என்றும் அதற்குப் பதிலாக எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழுநாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி 9ஆம் திகதி சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டவரைவு மற்றும் உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டவரைவு ஆகியவற்றின் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஒதுக்கீட்டுச் சட்டவரைவு மீதான மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை மாலை 5 மணிக்கு நடத்துவதற்கும் குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின்கீழ் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட 2022.12.03ஆம் திகதிய 2308/62 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக எதிர்வரும் 08ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)



## இலங்கையின் கடனைத் தீர்க்க சீனா முக்கியத்துவம் கொடுக்கும்

கொழும்பு, டிசெ. 7

கடன் பிரச்சினை தொடர்பில் இலங்கையின் நெருக்கடி மற்றும் சவால்களுக்கு சீனா அதிக முக்கியத்துவம் கொடுக்கும் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க சர்வதேச நாணய நிதியக் குழு இந்த வாரத்தில் சீனாவில் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்துடனும் ஏனைய நிதியமைப்புகளுடனும் சீனாவுக்கு நீண்டகால நல்லுறவு உள்ளது. இலங்கையின் நெருக்கடிகள் மற்றும் சவால்களுக்கு சீனா மிகுந்த முக்கியத்துவம் அளித்து பங்களிப்பைத் தொடரும். இலங்கை நெருக்கடியிலிருந்து மீண்டு கடன் சுமையைக் குறைத்து பேண்தகு அபிவிருத்தியை சாத்தியமாக்குவதற்கு சர்வதேச நிறுவனங்களும் சீனாவுடன் இணைந்து செயற்படும் என நம்புகிறேன் - என்றார்.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 423.5 பில். இல்லையேல் நாடு இருளில்!

## அமைச்சர் காஞ்சன அபாய எச்சரிக்கை



கொழும்பு, டிசெ.7

மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் அடுத்த வருடம் 8 மணி நேரம் மின்வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கான யோசனை அரசால் முன்வைக்கப்படவில்லை. அடுத்த வருடம் வறட்சி நிலவக்கூடும் என ஊகிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு அலகு மின்சார உற்பத்திக்கு 56.90 ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் மக்களிடமிருந்து 29.14 ரூபாவே அறிவிடப்படுகின்றது. இதன்படி ஒரு அலகுக்கு 27 ரூபாவரை வித்தியாசம் உள்ளது. இதனால் 423.5 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சாரசபைக்கு திறைசேரியோ அல்லது வேறு வரிகள்மூலமோ வழங்க வேண்டியுள்ளது.

இந்தத் தொகையை தற்போது திறைசேரியால் வழங்கமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, வரி விதிப்புகளைச் செய்துதான் நிதியைத் திரட்ட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்டணத்தை மீளாய்வு செய்ய வேண்டும். எரிபொருள், நிலக்கரி உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சாரசபைக்கு 423.5 பில்லியன் ரூபா கிடைக்காவிட்டால், அடுத்த வருடம் 6 அல்லது 8 மணி நேர மின்வெட்டுக்குச் செல்ல நேரிடும். மின்வெட்டுக்குத் தயாரெனில் கட்டண மறுசீரமைப்பைச் செய்யலாம்.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழு பொறுப்பற்றவிதத்தில் செயற்படுகின்றது. கடந்தகாலங்களில் உரிய கட்டண அதிகரிப்புக்கான அனுமதியை வழங்கவில்லை. நாம் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரமே விலை மறுசீரமைப்பு யோசனையை முன்வைத்துள்ளோம்- என்றார். (எ-44)

# மின்கட்டணம் உயர்ந்தால் முதலீட்டாளர் வெளியேறுவர்

## அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 7

மின்சாரக் கட்டணம் மேலும் உயர்த்தப்பட்டாலோ அல்லது மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டாலோ நாட்டிலுள்ள ஆடைத்தொழிற்சாலைகள் முடங்கும். இதனால் முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு நகரும் அபாய நிலை உருவாகும்.

இவ்வாறு சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் தேசிய நிலையத்தின் அழைப்பாளர் காமினி ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நாட்டில் கணிசமான தொழிற் சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டு பணி நீக்கங்கள் மற்றும் கூடுதல் நேர வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள ஆடைத்துறையிலுள்ள 3 தொழிற்சாலைகள் இந்த மாதம் தமது தொழிற்சாலைகளை மூடிவிட்டு இந்தியா செல்லத் திட்டமிட்டுள்ளன. இதனால் சுமார் 5 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் இரண்டு மடங்குக்கு மேல் மின்கட்டணம் உயர்த்தப்பட்டால் முதலீட்டாளர்களின் இலாபம் குறைவடையும். மின்கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றில் அதிகரிப்பால் இங்குள்ள தொழிற்சாலைகள் பலவும் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகள் நோக்கி நகரும்.

இலங்கையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பதன் காரணமாக உற்பத்திப் பொருள்களின் விலைகளும் அதிகரித்து வருகின்றன. உலகின் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் அந்தப் பொருள்கள் போட்டியிடும் போது எமது நாட்டின் பொருள்களின் கொள்வனவு குறைந்து காணப்படுகிறது- என்றார். (ச-இ)

# டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் குறையாது

*தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 7

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணம் குறைக்கப்படமாட்டாது என்று இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளதாவது:-

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் புதிய விலை 420 ரூபாவாகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்கு அமைய லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது.

டீசல் விலை குறைப்பு பஸ் கட்டணங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய அளவில் இல்லை. ஒரு லீற்றர் டீசலின் விலை 35 முதல் 40 ரூபாவால் குறைக்கப்பட்டால் பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியும் - என்றார். (எ-14-இ)

# நாட்டை முன்னோக்கி நகர்த்த இளையோர் பங்களிப்பு தேவை

## ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 7

உலகின் வளர்ந்த நாடுகளுடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது நோக்கம். இந்த வேலைத் திட்டத்துக்கு இளையோர் பங்களிக்க வேண்டுமே தவிர நாட்டைவிட்டு வெளியேறுவதால் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது. இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இளையோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் இளைஞர்களுடன் நடந்த இணையத்தள உரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இலங்கை இருந்தது. ஆனால், இன்று நாட்டின் பொருளாதாரம் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. உலகின் வளர்ந்த நாடுகளுடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டை நிச்சயமாக பொருளாதார சுபீட்சத்தை நோக்கி நகர்த்துவேன்.

2025 ஆம் ஆண்டளவில் வளமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு இளைஞர்கள் பங்களிக்க வாய்ப்பு இருக்கின்றது.

தமது நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்வதே இளைஞர்களின் பொறுப்பாகும். இன்றைய இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் போக்கு அதிகரித்துள்ளது. தற்போதுள்ள அரசமைப்பில் அவர்கள் மகிழ்ச்சியடையாததே இதற்குக் காரணம்.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார அமைப்பை விரைவாக அமைக்கவேண்டும்.

ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பயணம் இந்த வருட வரவு -செலவுத் திட்டத்துடன் ஆரம்பிக்கும் என்றார். (ச-இ)

# தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய பாதுகாப்புக் கொள்கை மீளாய்வு



கொழும்பு, டிசெ. 7

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய பாதுகாப்புக் கொள்கையில் திருத்தம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு வலுவான பாதுகாப்பு பொறிமுறைகள் அவசியம். அதற்கென பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட தேசியப் பாதுகாப்புக் கொள்கையை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது. திருத்தப்பட்ட தேசியப் பாதுகாப்புக் கொள்கை, மூலோபாயம் உள்ளடக்கிய எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தும். தேசிய பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்துவதற்கான புதிய உத்வேகத்தை அளிக்கும். அத்துடன் அச்சுறுத்தல்களை தணிக்கவும் பாதுகாப்பான மற்றும் செழிப்பான நாட்டை உறுதி செய்யவும் செயலூக்கம் மிக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேசியப் பாதுகாப்பு இயந்திரத்துக்கு தெளிவான கட்டமைப்பை வழங்கும் என்றார். (ச-இ)

துரித கடிதங்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேல் உள்ள பொதிகளுக்கு
UK - 1600/=
Germany - 2100/=
France - 2300 /=
Australia - 2900/=
Canada Normal Service - 1200/=
கிளைகள்:
யாழ்ப்பாணம். கிளிநொச்சி. கொழும்பு. மன்னார். வவுனியா. திருகோணமலை. மட்டக்களப்பு.

Hotline-0777554528
321, K.K.S.Road, Jaffna.
குறிப்பு:-வேலையாட்கள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறை நாட்டில் பூதாகரமாகும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 7

ஆசிரியர் பணியில் உள்ள சுமார் 2 ஆயிரம் பேர் 60 வயதில் ஓய்வுபெற உள்ள நிலையில், அதற்குத் தகுதியானவர்களை நிரப்ப அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை. இதனால் நாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை பூதாகரமாக உருவாகும் – என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

அடுத்த வருடத்துக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் அறவிடப்படும் கட்டணம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் அறவிடப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர் பணியில் உள்ள சுமார் 2 ஆயிரம் பேர் 60 வயதில் ஓய்வுபெற உள்ள நிலையில், அதற்குத் தகுதியானவர்களை நிரப்ப அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை. மேலும் ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின்னர், தேவையான ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ம)

# இலங்கைக்குச் செல்வதானால் மருந்துகளுடன் செல்லுங்கள்!

## அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 7

இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, இலங்கைக்குச் செல்வதானால் போதிய மருத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியாகவும் உயிர்காக்கும் மருந்துகளை எடுத்துச் செல்லுமாறும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தனது நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கொழும்புக்கு வெளியே மருத்துவ வசதிகள் குறைவாக இருப்பதாகக் கூறியுள்ள அமெரிக்கத் தூதரகம், கொழும்பு நகரில்கூட ஆறு பெரிய மருத்துவமனைகள் மட்டுமே இருப்பதாகவும், அந்த ஆறு மருத்துவமனைகளில் மூன்று மருத்துவமனைகளில் மட்டுமே அவசர சேவைகள் இருப்பதாகவும் தனது நாட்டு மக்களுக்கு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# மருந்துகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம்


கொழும்பு, டிசெ. 7

அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் அனைத்து மருந்துப் பொருள்களின் விலைகளும் அடுத்த மூன்று மாதங்களில் மீண்டும் அதிகரிக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் விலைகள் அதிகரிக்கப்படலாம். பல வருடங்களாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மக்களுக்குக் குறைந்த விலைக்கு மருந்துகளை வழங்கி வருகின்றது. தற்போதைய நாணயமாற்று விகிதத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை 7, 8 மாதங்களுக்கு முன்னர் வழங்கிய விலைக்கு வழங்க முடியாது என்று அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் தினுசா தஸநாயக்க தெரிவித்துள்ளார். (ம-14.இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1956



மறைவு 05 . 12 . 2022

## இராசதுரை விஜயநாதன்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, தாமரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை விஜயநாதன் கடந்த (05.12.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை தங்கமுத்து ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம் நேசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கனகசபாபதி, சரோஜினிதேவி, கமலா, விமலா, விஜயராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வக்சலாதேவி (பிரான்ஸ்), சசிக்குமார், ரமேஸ்குமார், சுரேஸ்குமார் (பிரான்ஸ்), ஜீவிதா (ஜேர்மன்), நரோஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவரத்தினம், நாராஜனி, விதுஷா, பிரதீபன், ரஜிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவளம், சுபகின்பிள்ளை, அமரர் மொகமட் சலீம், அமரர் பத்மநாதன், சண்முகநாதன், தில்லைநாதன், விஸ்வநாதன், உதயநாதன், ஜெகநாதன், விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஆதவ், ஆர்த்தி, அதீதி, அபூர்வன், ஐஸ்வர்யா, ஆரோசனன், அக்ஸயா, ஹிரோசனா, தஸ்விந், மீரா, மித்துரா, மிதுரா, விதுரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 356 079

(CS 22128) 1/6)

# சந்திரிகாவை எவரும் புறமொதுக்கமுடியாது

## சு.க.வின் உபதலைவர் 'பல்டி'



கொழும்பு, டிசெ. 7

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஆற்றலும் அனுபவமும் கொண்ட சிறந்த மூத்த அரசியல்வாதி. அவரை எவரும் தூக்கி வீச முடியாது - இவ்வாறு சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

சந்திரிகாவுக்கு எதிராக சுதந்திரக் கட்சி சம்பிரதாயத்துக்கு அமையவே நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சந்திரிகாவின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சு.க. உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தனகல்ல பகுதியில் அமைந்துள்ள ஹொரகொல்ல, பண்டாரநாயக்க சமாதிக்கு முன்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் படங்கள் அச்சிடப்பட்ட பதாகையைத் தரையில் வீசி தேங்காய்களையும் உடைத்து கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரசாங்கம் ஆசைப்படுவது இதற்கா?

மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு மாகாணத்தில் பல இடங்களில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் அத்தியாவசிய மருந்துகளினதும், மருத்துவச் சாதனங்களினதும் பற்றாக்குறை அபாயக் கட்டத்தை எட்டியிருக்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்ச்சியாக எச்சரித்து வரும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சுகாதாரத்துறையையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அது தொடர்பாக சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் அரசாங்கத்துக்கு அண்மைக்காலமாக தொடர் எச்சரிக்கைகளை விடுத்துள்ளபோதும், அரசாங்கம் அது தொடர்பில் அக்கறை காட்டுவது போன்று தெரியவில்லை. அரசாங்க மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் பல மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் வெறுங்கையுடன் திருப்பியனுப்படுகின்றனர். அதைவிடவும் மருந்து வகைகளின் விலைகள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள வருமானத்துக்கு மீறிய செலவால் அந்தரித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு, மருந்துப் பொருள்களின் விலையேற்றம் பேரிடியாகவே இருக்கின்றது. மருத்துவச்செலவுகளுக்கு அஞ்சி அவர்கள் சிகிச்சைக்குச் செல்வதைத் தவிர்க்கும் மனநிலையை அடைந்திருப்பதையும் அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. இது ஓர் ஆபத்தான நிலைமையாகும்.


இலங்கையின் ஒட்டுமொத்த மருத்துவக் கட்டமைப்பில் சுமார் **5** ஆயிரத்து **600** மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது என்று அறியமுடிகின்றது. திடீர் இருதய நோய், நீரிழிவு நோய் போன்ற பல ஆபத்தான, உயிர் பறிக்கக்கூடிய நோய்களுக்கு உபயோகிக்கும் மருந்துகள் பலவும் இவற்றில் உள்ளடங்குகின்றன. மருத்துவ சேவை பிரிவுகளில் **525** மருந்து வகைகளும், **5** ஆயிரத்து **376** அறுவைச் சிகிச்சை மருந்து வகைகளும் காலியாகியுள்ளன என்று அபாயச் சங்கு ஊதப்பட்டுள்ளது. 'நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன' என்று அரசாங்கமும், துறைக்குப் பொறுப்பான அமைச்சரும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றபோதும், நிலைமைகளில் எந்த மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. நிலைமை இன்னமும் மோசமடைந்திருக்கின்றது என்றே கருத வேண்டியிருக்கின்றது. பல அரசாங்க மருத்துவமனைகளில் இப்போது அறுவைச் சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாரடைப்புக்குக் கொடுக்கவேண்டிய 'டெனக்டப்ளேஸ்' போன்ற மருந்துகள் இல்லாததால், அந்த மருந்தே இல்லாமல் சிகிச்சை வழங்கப்படுகிறது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். ஒரு நோயாளிக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முடியாமல், இருப்பதை வைத்து சமாளிக்கவேண்டிய நிலையே இப்போது நாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஏற்பட்டுள்ளது. இன்னும் சில நாள்களில் இந்த நிலைமை இன்னும் மோசமடையும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

'மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று துறை சார்ந்த அமைச்சர் கூறுகின்றபோதும், நடைமுறையில் நிலைமை எதிர்மாறாகவே இருக்கின்றது. தற்போதுள்ள நிலைமை தொடருமானால் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு முழுமையாகவே உடைந்து விடும். அதனால் ஏற்படும் பேரழிவு முன்னெப்போதும் கண்டிராத வகையிலேயே இருக்கும். ஏனைய விடயங்களில் செய்யும் இழுத்தடிப்பையும் – கண்கட்டுவித்தைகளையும் அரசாங்கம் சுகாதார விடயத்திலும் மேற்கொள்ளாது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் மருந்துகளுக்கான தட்டுப்பாட்டால் சாவுகளின் எண்ணிக்கை அதிகரித்து, மக்களிடையே மிகப்பெரிய கொந்தளிப்பை உண்டாக்கி, மீண்டும் அவர்கள் வீதிகளுக்கு இறங்கிப் போராடும் நிலையை உருவாக்கிவிடும். அதற்குத்தான் ஆசைப்படுகிறதா ரணில் அரசாங்கம்?

நாளொரு நல்வார்த்தை

"தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்பவனே உலகின் மாபெரும் சீர்திருத்தவாதி!"

- பெர்னாட்ஷா




# கட்டணங்களை உயர்த்தாது மாற்றுத்திட்டம் உருவாக்குக

## எரிசக்தி அமைச்சுக்கு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 7

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காது மின்சாரசபையின் நஷ்டத்தைக் குறைப்பதற்கு மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள் என அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டது.

மின்கட்டணத்தை அதிகரிப்பு தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் இடம்பெற்றபோதே அமைச்சர்கள் சிலர் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் மின்கட்டணத்தை உயர்த்துவது அத்தியாவசியமானது என எரிசக்தி அமைச்சர் அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காமல் மின்சாரசபையின் நஷ்டத்தைக் குறைக்க மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சர்கள் சிலர் ஆலோசனை வழங்கினர்.

எனினும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காமல் தற்போதுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் நாளாந்தம் சுமார் 6 மணிநேரம் மின்வெட்டு ஏற்படும். மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதே பொருத்தமானதாகும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சில நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுட்டிக்காட்டினார்.

ஆயினும் மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாமலேயே கலந்துரையாடல் நிறைவடைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ராஜித, வெல்கம, துமிந்தவுக்கு விரைவில் அமைச்சுப் பதவி!

கொழும்பு, டிசெ. 7

அமைச்சரவையில் மேலும் மூவரை விரைவில் அமைச்சர்களாக இணைத்துக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்களான குமார வெல்கம, ராஜித சேனாரத்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோரே புதிய அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார் வெல்கம போக்குவரத்து அமைச்சராகவும், ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராகவும் எதிர்வரும் நாள்களில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுக்கு மின்சக்தி அமைச்சராகப் பதவி வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)

நாளை

08.12.2022

வியாழக்கிழமை

கார்த்திகை 22

சுபநேரம் : 07.47 - 09.17

ராகுகாலம்: 01.47-03.17

விநாயக விரதாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலட்டைப் பண்ணை விவகாரம்;

# மக்கள் பிரதிநிதிகள் மௌனம் காத்தால் மீனவர்கள் நாடாளுமன்றுக்குச் செல்வர்

### மீனவ சமூகம் மிரட்டல்தொனி

யாழ்ப்பாணம், டிசெ. 7

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணை விவகாரத்தில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்தும் மௌனம் காத்தால் இனிவரும் காலங்களில் கடற்றொழில் சமூகத்திலிருந்து பிரதிநிதிகளை நாடாளுமன்றுக்கு அனுப்பவேண்டி வரும் - இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனம் என்பன கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் உள்ளிட்டோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்ட இடங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதற்கெதிராகக் குரல் கொடுக்கவேண்டும். சட்டவிரோதக் கடற்றொழிலை தடுக்க ஏன் கடற்படையால் முடியாதுள்ளது? மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் இது தொடர்பாக முறையிட்டோம்.

கடலட்டைப் பண்ணைகள் உருவாக்கப்பட்ட பின்னர் வீச்சுவலைத் தொழிலாளர்கள், அடிவலைத் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் நேரத்தில் வீடுகளைத் தேடி வருகிறார்கள். ஆனால், மக்களுக்குப் பிரச்சினை ஏற்படும்போது யாரும் வருவது கிடையாது. கடற்றொழிலாளர் சமூகத்துக்கு பிரச்சினை வரும்போது பலரும் பார்வையாளர்களாக இருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்வாதிகளுக்கு கண் இல்லையா? மக்களுக்குத் தீர்வு வழங்கும் எண்ணம் இல்லையா? பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்துகின்றனர்.

இவ்வளவு காலமும் யார் கடலட்டையைப் பிடித்து அந்நியச் செலாவணியை வழங்கியது? தற்போது மட்டும் முதலாளிகளுக்குக் கடலட்டைப் பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் மக்கள் பிரதிநிதிகள் இனியும் மௌனம் காத்தால் கடற்றொழில் சமூகத்திலிருந்து மீனவர்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படுவர். ஓரணியில் நின்று அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் - என்றனர். (ம-14,20)

## பிள்ளையார் கதைப்படிப்பும் லட்சார்ச்சனைப் பூசையும்

யாழ்ப்பாணம், டிசெ. 7

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதைப்படிப்பு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு லட்சார்ச்சனைப் பூசையும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

## டிறிபேக்கின் மாணவனுக்கு ஜனாதிபதி சாரணர் விருது



கொடிகாமம், டிசெ. 7

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவர் மதுசன் ஜனாதிபதி சாரணர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சாரணர் விருதுக்கே அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ய-159)

# கடலட்டைப் பண்ணை போராட்டம் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது

### பூநகரி ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

கிளிநொச்சி - கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணைகள் வேண்டாம் என்று போராட்டம் நடத்துவோரால், சுமார் 200 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று பூநகரி ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தம்பிப்பிள்ளை மகேந்திரன் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், மேலதிக வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகக் கடலட்டைப் பண்ணைகளை கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 203 உறுப்பினர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த நிலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சுயலாபத்துக்காகவும் குறுகிய நலனுக்காகவும் கடலட்டைப் பண்ணைக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சுமார் 266 கடற்றொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தால், 174 உறுப்பினர்களின் கடலட்டைப் பண்ணைக்கான விண்ணப்பங்கள் நக்டா நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

வெளியிலுள்ள தனிநபர்களுக்கு கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணை வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதை நாம் எதிர்ப்போம். ஆனால், கிராஞ்சியில் போராட்டம் நடத்துபவர்கள் பினாமிகளின் பெயரில் பண்ணைகளை அமைத்துவிட்டு பண்ணை வேண்டாம் எனப் போராடுகின்றனர். எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படவுள்ள கடலட்டைப் பண்ணைகளை தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணைகள் யாருக்கு வழங்கப்படுகின்றன? அது கடலுக்குப் பாதிப்பாக அமையப் பெற்றதா? என்ற உண்மையை ஊடகங்கள் வெளிப்படுத்துவதோடு நேரடியாக வருகை தந்து உண்மை நிலையையும் வெளிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார். (எ-14-27, 20)

## சமய தீட்சை வழங்குதலும் சர்வாலய உற்சவமும்

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கும் சர்வாலய தீப பூசை பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகி இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது வார்த்தைகளில் கவனம்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். வெற்றிபெறும். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உற்சாகம் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். அவசியத் தேவை இருந்தால் மட்டுமே தக்க முன்னேற்பாடுகளுடன் வெளியில் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும். பணவிரயத்துக்கு வாய்ப்பு உண்டு.


**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை




“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.” -வள்ளுவர்



ஆர்.தரங்கினி

## கொழும்பு தமிழ்சங்கத்தின் ஏற்பாட்டில்

# பண்டாரவன்னியனுக்கு பண்பாட்டுப் பெருவிழா

கொழும்பு தமிழ்ச்சங்கமும் வன்னி கலை, பண்பாட்டு கூடமும் இணைந்து நடத்திய மாவீரன் பண்டாரவன்னியன் பண்பாட்டு பெரு விழா அண்மையில் நகரசபை மண்டபத்தில் கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெற்றுள்ளது.





### நிகழ்வுகள்

பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பிரசாந்தினி நர்த்தனா நாட்டியாலய மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் விழா கோலாகலமாக ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாக சர்சன ஷேத்ரா கலைக்கூட மாணவியின் தனி நடனம், கலையருவி கலாமன்றத்தினரின் கரகாட்டம், வில்லிசை, பிரசாந்தினி நர்த்தனா நாட்டியாலய மாணவர்களின் சிவதாண்டவ நடனம், எழுத்தாளர் செ.லக்ஸ்மிகாந்தனின் உருவாக்கத்தில் ‘விதையாகும் வன்னியது வீரம்’ தனி நடிப்பு, எஸ்.ஜி.சாந்தனின் ‘புதல்வர்களின் தமிழிசையோடு பாடல்கள் போன்ற கலை நிகழ்வுகள் அடுத்தடுத்து அரங்கேறி பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தின.

இவை அனைத்துக்கும் மகுடம் வைத்தாற்போல், ‘பண்டைத்தமிழ் உணர்வோடு பண்டாரவன்னியனைக் கொண்டாடு’ எனும் தலைப்பில் கவிஞர் கு.வீரா தலைமையிலான கவியரங்கம் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

### பரிசளிப்பு

மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவினை முன்னிட்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தூயகரங்கள் சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் நிகழ்வின் ஒரு பகுதியாக வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்று ஆய்வுரையை வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரையும், அடங்காப்பற்றும் தமிழர் வரலாறும் என்ற ஆய்வுரையை வரலாற்று ஆய்வாவாளரும் ஆசிரியருமான மா.மோகனகிருஸ்ணன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

### அதிதிகள்

நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் மாலினி முகுந்தன், கொழும்பு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை, இலக்கியக்குழுத் தலைவர் மதுசூதனன், வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி சிவகுமாரன், வவுனியா தெற்கு தமிழ்பாட ஆசிரிய ஆலோசகர் த.நிறைமதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

### வேண்டுகை

தமிழ் மன்னர்களின் வீரமும் மண் மீதான அவர்களின் பற்றும் ஆவணப்படுத்தப்பட வேண்டியதுடன், அடுத்த சந்ததிக்குக் கடத்தப்பட வேண்டியவனாகவும் அமைகின்றன. அதற்கு இத்தகைய பண்பாட்டுப் பெருவிழாக்கள்தான் வழிவகுக்கும் நிலையில், இவ்வாறான பண்பாட்டு விழாக்களையும் நிகழ்வுகளையும் தொடர்ச்சியாக மாவட்ட ரீதியிலும் பாடசாலைகளிலும் மேற்கொள்வதற்கு துறைசார் அதிகாரிகளும் ஆய்வாளர்களும் முன்வரவேண்டும்.

இதுவே நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பலரினதும் வேண்டுகையும் வேணவாவுமாக அமைந்தது.

## No War

### சுவிஸ் குறும்படப் போட்டியில்

## ஈழத்துப் படைப்பாளியின் படைப்பு இறுதிப் போட்டிக்குத் தெரிவு!



சுவிஸில் இடம்பெற்ற குறும்படப்போட்டியில் ஈழத்து இளைஞன் கவிதரன் கலையம்சன் நடித்துத் தயாரித்துள்ள ‘நோ வோர்’ (NO WAR) குறும்படம் இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் 70 குறும்படங்கள் பங்குபற்றின. இதில் 6 குறும்படங்கள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ள நிலையில் அவற்றில் ஒன்றாக கலையம்சனின் ‘நோ வோர்’ குறும்படம் இடம் பிடித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி செங்காளன் மாநிலத்தில் நடைபெறவுள்ள குறும்பட விழாவில் இந்த 6 குடும்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டு வெற்றிபெறும் குறும்படம் அறிவிக்கப்படும். ‘நோ வோர்’ குறும்படத்தில் எமது தாய்மண் சுமந்த பெருவலியை, போட்டி விதிமுறைகளுக்கு உட்பட்டு ஜேர்மன் மொழியில் சொல்லியிருக்கின்றார் கவிதரன் கலையம்சன்.



# தென்மராட்சி வலய தமிழ்மொழி விழா!

தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ் மொழித் தின விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் கலாசார விழுமியங்கள் பறைசாற்றும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்களத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வ.வசந்தகுமார் கலந்துகொண்டார். நிகழ்வின் ஒருபகுதியாக ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், சிறுகதையாக்கப் பிரிவு போட்டியில் தேசிய மட்டத்தில் சாதித்த மாணவி றொ.தீபிகா ஆகியோரும், வலயமட்ட, மாகாணமட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர். (159)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர், பரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து நீண்டகாலம் சபை உறுப்பினராக விளங்கி ஆலய வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றிய

## கந்தையா குணராசசிங்கம்

அவர்கள் கடந்த (04.12.2022) அன்று அமரத்துவமடைந்த செய்தி மிகவும் துயரடையவைத்துள்ளது. அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய வீரகத்திப் பிள்ளையாரை வணங்குகின்றோம்.


**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**நம்பிக்கைப் பொறுப்பாளர்**
**பரிபாலன சபையினர்,**
**கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்**
**முதலாய கோயில்கள், கைதடி.**

(CS 22123)1-6

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 07 . 07 . 1946



உதிர்வு 06 . 12 . 2022

எமது பூபாள ராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவரும், எமது பழைய மாணவர் சங்க ஸ்தாபக அமைப்பாளர்களில் ஒருவரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராய் செயற்பட்டவரும், எமது பழைய மாணவ சங்கத்தின் உப தலைவரும் ஆகிய **திருமதி கைலாஜினி இந்திரன்** அவர்களினதும் மற்றும் எமது பூபாள ராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவராகிய **திருமதி சுபாஜினி ராஜ்குமார்** அவர்களினதும் பாசமிகு தந்தையாராகிய

## அமரர் வைரமுத்து பாலேந்திரன்

அவர்கள் நேற்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பூபாள ராகங்கள் விழாக்குழு**
**யா/கம்பர்மலை வித்தியாலயம்**

(CR 38686)1-6

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 . 11 . 1977



ஆண்டவன் அடியில் 06 . 12 . 2022

## பொன்னுத்துரை சிவநாதன் (சிவா)

**(முன்னாள் உரிமையாளர், அன்பு உணவகம், யாழ்ப்பாணம்.)**

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவநாதன் (சிவா) அவர்கள் நேற்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி யோகலிங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், பிரியதர்சினியின் பாசமிகு கணவரும், டனுஷனின் ஆருயிர் தந்தையும், குலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் பரமேஸ்வரன் (பால்குடி), சசிகலா, இரத்தினசிங்கம், மாதினி (ஜேர்மனி), தவமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிருஷ்ணபேபி (கனடா), தர்மகுலசிங்கம் (குலம்-வர்த்தகர், புங்குடுதீவு), கருணாகரன் (பிரான்ஸ்), ஜெயலட்சுமி, இராஜகுமார் (ஜேர்மனி), இராசகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜரூபன், றக்ஷனா, கிஷாந் (கனடா), நிக்ஷன், யனோஷன், தனுஷாந் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், சகிந்தன் (பிரான்ஸ்), நிரோசன், நிஷாலினி, நிரோசா, லக்ஷிகன், நிலக்ஷன், சங்கீதன், நிலானி (ஜேர்மனி), மகிந்தன், தருண், அன்விதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**7ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**
**076 4161 340**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 48024) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1956



மறைவு 04 . 12 . 2022

## அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின்

**(இளைப்பாறிய ஆசிரியர், பரியோவான் கல்லூரி)**

பாங்சால் வீதியை பிறப்பிடமாகவும், 15, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் (இளைப்பாறிய ஆசிரியர், பரியோவான் கல்லூரி) கடந்த (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-திரேசம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரகாசராஜா-காணிக்கை மரியை அவர்களின் மருமகனும், கிறசன்சியாவின் அன்புக் கணவரும் அடம் சிமித் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கிறிஸ்சான் மற்றும் தனுஜா (லண்டன்), கீர்த்திகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரூபநிதி, டினேஸ், பிரான்சிஸ் ஆகியோரின் மாமனாரும், எலிசா, கெட்ருரா, கசாந்ரா, கிரிசான், எறோரா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், மரியதாஸ் மற்றும் சூசைதாசன், கிறிஸ்தோப்பர், வோல்ட்டர், இம்மானுவேல், அன்ரனீற்றா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கெல்வின் மற்றும் சுவர்ணா, ஜிம்றோன், றிங்கோ, விக்கியானா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை (09.12.2022) அன்று அவரின் இல்லத்திலிருந்து பி.ப 3.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர், புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 241 2591**

(CS 22124) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 01 . 1965



மறைவு 04 . 12 . 2022

## கோவிந்தசாமி ஞானேஸ்வரன் (சின்னதம்பன்)

**(பிரபல தவில் வித்துவான்)**

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி ஞானேஸ்வரன் கடந்த (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோவிந்தசாமி - மனோரஞ்சிதம் தம்பதியரின் மகனும், சுப்ரமணியம்- சந்திரா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரமிளா (பத்மா) அவர்களின் அன்புக் கணவரும், ஜீவலக்ஷியின் பாசமிகு தந்தையும், ரிஷபனின் அன்பு மாமனாரும், பவித்திரன், கிருத்திகா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கண்ணன், சியாமளா ஆகியோரின மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**075 053 0278**

(CS 22126) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(A/L) சித்தியடைந்த SMARTGEN கணக்குரிமையாளர்களுக்கு

நெனஜய புலமைப்பரிசில்

உ/த பரீட்சையில் சாதனைபடைத்த 18+ கணக்குரிமையாளராக நாளையை வெல்ல இன்றே விண்ணப்பியுங்கள்.




நெனஜய சிறப்புப் புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.2500 வீதம் 4 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.120,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2021ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score 200 பெற்றுக் கொண்ட, BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 82 புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

நெனஜய திறமைக்கான புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.2000 வீதம் 3 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.72,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2021ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score ஐ பெற்றுக் கொண்ட BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 300 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

நெனஜய புலமைப் பரிசில்களுக்கான தகைமைகள்

- உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/வர்த்தகம்/கலை/உயிரியற் கட்டமைப்புத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பிரதான பாடப்பிரிவுகளின் கீழ் 2021ம் ஆண்டில் நாடளாவிய ரீதியிலும், அவ்வாறே மாவட்ட மட்டத்திலும் உயர் பெறுபேறுகளைப் பெற்ற BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியர் இப் புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பிக்கலாம்.
- 2021.08.01ம் திகதியிலிருந்து 2022.01.31 வரை தமது கணக்கில் ரூ. 10,000 குறைந்தபட்ச மீதியைப் பேண வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை வங்கியின் BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருப்பவர்கள் பாடசாலை சீருடையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வர்ணப் புகைப்படத்துடன், www.boc.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொண்ட (Download) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), சந்தைப்படுத்தல் பிரிவு, 16ம் மாடி, இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம், கொழும்பு 01. என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிகத் தகவல்களை BOC இணையத் தளத்திலிருந்தும், FACE BOOK பக்கத்திலிருந்தும் மற்றும் நாடுமுழுவதிலுமுள்ள BOC கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2022 டிசம்பர் 31

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# யாழ். பல்கலை மருத்துவபீடத்தின் மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது.

"ஆராய்ச்சியினூடான ஞானம்" என்ற தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்த மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த சுகாதாரத்தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதாரப் பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு முதன்மை உரையாற்றினார்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவ பீடத்தின் 40ஆம், 41ஆம் மற்றும் 42 ஆம் அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

40ஆம் அணி மருத்துவ மாணவர்களால் சுமார் 30 ஆராய்ச்சிச் சுருக்கங்கள் இந்த ஆய்வு மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. "நாள்பட்ட நோய்களும், பராமரிப்பும்", "பெண்கள் குழந்தைகளுக்கான ஊட்டச் சத்தும், அறிவூட்டலும்", "பெருந்தொற்றுப் பரவல் அபாயம்" ஆகிய மூன்று தலைப்புகளில் ஆராய்ச்சி அமர்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச் சேர்ந்த நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சிச் சுருக்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-27)



கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். நீண்ட காலம் கூட்டுறவுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்பட்டு, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரனால் விருதுகள் வழங்கப்பட்டன. (எ-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருத்துவ...

மொத்தம் 24 கொள்கலன்களில் 255 மெற்றிக் தொன் எடையுடைய மருத்துகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளன என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரை இலங்கைக்கு 5 பில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகளை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளது என்று சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

### வடக்குப்...

வடமாகாணப் பாடசாலை மாணவர்களிடத்தில் அண்மைய நாள்களாக போதைப்பொருள் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இதனால், போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய வடமாகாண ஆளுநரின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வீதிச்சோதனைகளுக்கு மேலதிகமாக இனிவரும் நாள்களில் வடமாகாணப் பாடசாலைகளில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்படும். இந்தச் சோதனைகளில் மாணவர்களிடம் இருந்து போதைப்பொருள் மீட்கப்பட்டால் அவர்களுக்குப் போதைப்பொருள் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பான வலைப்பின்னல் தொடர்பில் அதிதீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சட்டம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும்.

**பெற்றோரே பொறுப்புணர்க**

எத்தனை செயற்றிட்டங்களை முன்னெடுத்தாலும் வெறுமனே பொலிஸாரால் மட்டும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்திவிட முடியாது. இதற்கு அனைத்து மக்களின் ஒத்துழைப்பும் மிகமிக அவசியமானது. போதைப்பொருள் பாவனையாளர்களாக உங்கள் பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்றால் விடயத்தை மூடிமறைக்காமல் அதைப் பொலிஸாருக்கு வெளிப்படுத்துங்கள். வடமாகாணத்திலுள்ள 61 பொலிஸ் நிலையங்களும் இந்த விடயத்தில் அதீத ஈடுபாட்டுடன் இருக்கின்றன - என்றார். (அ-ம-125-20)

## யாழ். விவசாயிகளுக்கு நவீன உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு நவீன உள்ளூட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டப் பணிப்பாளரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ். மாவட்ட நவீன விவசாய உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கம் இணைந்து நவீன முறை உள்ளீட்டு உபகரணங்களை வழங்கியது. இந்த நிகழ்வில் சுமார் 190 விவசாயிகள் கலந்துகொண்டனர். (ய-27)

# யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் மூளாய்.

Best Wishes

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் - 2021





**இடமிருந்து வலமாக 1st Row**

| | | |
|---|---|---|
| 1. | வி. டுபிசா | 8A, B |
| 2. | யூ. அர்ச்சனா | 8A, B |
| 3. | சி. சந்துசா | 8A, B |
| 4. | கா.அபர்ணா | 6A, 3B |
| 5. | செ. அபிநயா | 5A, 3B, C |
| 6. | மு. திவானுஜன் | 5A, 3B, C |
| 7. | ப. பவித்திரா | 5A, 2B, 2C |
| 8. | பு. டிலானி | 4A, 3B, 2C, |
| 9. | இ.சோபிகா | 4A, 2B, 2C, S |
| 10. | இ.கிசானி | 4A, B 3C, S |
| 11. | ச. பவரதன் | 3A, 2B, 4C |
| 12. | வெ. நிலெக்சன் | 3A, 2B, 2C, 2S |
| 13. | சு. டினோஜா | 3A, 2B, 3C, S |
| 14. | ஆ. யதுசா | 3A, 2B, 3C, S |
| 15. | நா. ஜென்சனா | 3A, 2B, 2C, 2S |

**2nd Row**

| | | |
|---|---|---|
| 1. | த.தமிழினி | 2B, 5C, S |
| 2. | த.சாம்பவி | 2A, 4B, 3C |
| 3. | கி.தன்சாயினி | 3C, 3S |
| 4. | த.தனுசியா | 4B, C, 3S |
| 5. | இ.வர்ணஜா | A, 2B, 5C, S |
| 6. | க.சந்திஜா | A, 2B, 2C, 4S |
| 7. | ஜெ.சாருஜன் | 2B, 5C, 2S |
| 8. | இ.சந்தோஷ் | 4C, 4S, |
| 9. | ந.துவாரகன் | A, 2B, 5C, S |
| 10. | கு.விமலன் | 2A, B , 6C |
| 11. | ப.பிரசாந் | A, 5C, 2S |
| 12. | ஜெ.கௌசிகன் | 2A, 2B, 3C, 2S |
| 13. | சி.துவாரகன் | 2A, B, 5C, S |
| 14. | உ.டயன்சியன் | A, 4C, 4S |
| 15. | சா.சுவேந்தியன் | A, 3C, 4S |
| 16. | செ. கிருத்திகா | 2B, 3C, S |

நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும், சித்தியெய்திய மாணவர்களையும் மனநிறைவோடு வாழ்த்துகின்றோம்.

Congratulations!

Congratulations

*வாழ்த்துவோர்:*

**பழைய மாணவர் சங்கம்**

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், மூளாய்.**

Congratulations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய தொடர்ச்சி

# என் நினைவுத்திரையில் பேராசிரியர் கைலாசபதி

■ பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
மேனாள் தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



விரிவுரை மண்டபத்தினுள்ளே சரியான நேரத்துக்கு வருவார். கையிலே மூன்று, நான்கு நூல்கள் இருக்கும். வகுப்பு அமைதியாகும். ஆறுபேர்தான் மாணவர்கள் என்றாலும் பெரும்பாலும் நின்றுதான் படிப்பிப்பார். சிலவேளைகளிலே கரும்பலகையையும் பாவிப்பார். ஒருநாளும் அவர் குறிப்பு சொல்லமாட்டார். ஆனால், நாங்கள் குறிப்புக்களைக் குறித்துக்கொள்வோம்.

அவர் படிப்பித்தவற்றுள் மிக முக்கியமான விடயங்கள் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்ககாலம், தொல்காப்பிய பொருளதிகாரம், சிறப்பாகப் புறத்திணை இயல், இலக்கிய கர்த்தாக்கள் என்ற பாடப்பரப்பில் வரும் கபிலர், பரணர், நக்கீரர், இளங்கோ, பாரதி ஆகியோர் பற்றியும் மூலபாடத் திறனாய்வு பற்றியும் மிக விரிவாகச் சுவையாகக் கற்பித்தார். அவரது கற்பித்தற் பாணியை அவரிடம் படித்த எவரும் மறக்கமாட்டார்கள். இடையிடையே வினாக்கள் கேட்பார். சில நகைச்சுவை உரையாடல்களையும் மேற்கொள்வார். நான் மட்டுமே மாணவன் என்பதால் வினாக்கள் என்மீதுதான் பாயும். சொல்லாவிட்டால் விடையைத் தான் சொல்லுவார். என்னை அடிக்கடி 'சான்றோன்' என்று அழைப்பார். (சங்க காலத்திலே சான்றோன் என்றால் வீரனென்றே பொருள்) இடையிடையே நகைச்சுவையாகத் 'தாரகை நடுவே தண் மதி போல' (பெண்பிள்ளைகளுக்கு நடுவே இருப்பதனால்) வீற்றிருக்கும் சான்றோன் என்றும் அழைப்பார். சில நேரங்களிலே 'பாஞ்சாலி போல இருக்கும் சான்றோன்' என விழிப்பார். (மாணவிகளுக்கு நடுவே இருப்பதனால்) பெண்பிள்ளைகளைப் பெரிதாகக் கேட்கமாட்டார். அடிக்கடி நான் கேள்விகேட்பேன். கேட்டால் தெளிவாக விளக்குவார். மட்டந்தட்டி இருத்தும் வழக்கம் அவரிடம் அறவே இல்லை. கேள்விகள் கேட்பதை விரும்புவார்.

அவரது எல்லா விரிவுரைகளிலும் அரசியல், சமூகவியல், மானுடவியல், வரலாறு முதலியன பின்னணியாக இருக்கும். அதேவேளை இரசனையும் இருக்கும். இதனாலே அவரது விரிவுரைக்கு மாணவர்கள் விரும்பிச் செல்வார்கள். அவர் சங்ககாலத்தை, சங்கப்பாடல்களை முற்கூட்டிய அடிப்படையிலேதான் கூறுவார். புரவலன், இரவலன் இவர்களது வாழ்வியற் பின்னணி, குடும்பப்பின்னணி, சமூக பொருளாதாரப் பின்னணி பற்றியெல்லாம் விரிவாக, விளக்கமாகச் சான்றுகளுடன் கற்பிப்பார். பொருத்தமான மேற்கோள்களைக் கூறுவார். வணிக வர்க்கத்தின் எழுச்சி, புரவலர் இரவலர் உறவுக்கான பின்னணி, ஆளும் வர்க்கத்துக்கு அனுசரணையாக இயங்கிய பல புரவலர்கள் போன்ற பலவற்றைச் சான்றுகளுடன் சொல்லுவார்.

ஒவ்வொரு விரிவுரை முடிவிலும் வாசிக்கவேண்டிய நூல் விவரங்களைச் சொல்லுவார். முதல்வாரம் குறிப்பிட்டுச் சொன்ன நூல்களிலே எவற்றையெல்லாம் பார்த்தீர்கள், வாசித்தீர்கள் என்று கேட்பார். அதனாலேயே நாம் விரிவுரை முடிந்த பின்னர் நூல்நிலையம் சென்றுவிடுவோம். நூல்நிலையம் இரவு எட்டுமணிக்கு மூடப்படும். எட்டுமணி வரை நூலகத்துள் இருக்கும் மாணவர்களுள் நானும் ஒருவன்.

தொல்காப்பியம் புறத்திணை இயலைக் கற்பிக்கும் பொழுது அடிக்கடி தேவைநோக்கி அகத்திணை இயலுக்குள்ளும் போய் வருவார். திணைக் கோட்பாடு பற்றிக் கூறுவார். ஒப்பியல் நோக்கிலே விளங்கவைப்பார். வாய்மொழி இலக்கிய மரபு எப்படிச் செந்நெறி இலக்கியமாக முகிழ்த்தது என்பன போன்ற பலவிடயங்களைக் கூறுவார். குறிப்பிட்ட பாடத்துக்குள் மட்டும் நில்லாமல் அதனுடன் தொடர்புடைய எல்லா இடங்களுக்கும் சென்று இறுதியாகப் பாடத்திலே விட்ட இடத்துக்கு வந்து நிறைவுசெய்வார். இது இவரிடம் காணப்பட்ட தனிச்சிறப்பு எனபேன்.

இவர் இலக்கியத்தை இரசனையாகவும் அதேவேளை அரசியல், சமூக, பண்பாட்டு, கலைப் பின்னணியிலும் கற்பிப்பார் என்பதை ஏலவே குறிப்பிட்டேன். இவரின் இரசனையின் உச்சத்தினை நெடுநல்வாடையைக் கற்பிக்கும் போது உணர்ந்தேன். நெடுநல்வாடையிலே பெய்யும் மழை விரிவுரை மண்டபத்துக்குள்ளும் வந்ததுபோல் இருக்கும். ஒருவகை நாடகபாணி, நடிப்புச் சாயல் என்பனவும் இவரிடம் இருக்கும்.

இலக்கிய கர்த்தாக்களுள் இவர் அதிக ஈடுபாட்டுடன் இறங்கிவிடுவார். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களிலே தொடங்கி இளங்கோவுக்கு வந்து பாரதியிலே நிறைவுசெய்வார். அவரது நோக்குநிலை, கருத்துநிலை, உலக இலக்கியப் பரிச்சயம் முதலிய எல்லாம் விரிவுரையினூடு எம்மிலே பதிவாகிவிடும். அகவயமாக இலக்கியத்தை நோக்கியும் இரசித்தும் வந்த எனக்குப் புறவயமாகவும் இலக்கியத்தை அணுகக் கற்பித்தவர் கைலாசபதி. இதனால் தமிழ் இலக்கியத்தினை அகவயமாகவும் புறவயமாகவும் பார்க்கும் பண்பு என்னிடம் பதிவாகியது.

* * *

தமிழ்ச் சிறப்பு நிறைவாண்டிலே மூலபாடத்திறனாய்வு' என்ற பாடத்தை மிகச்சிறப்பாகக் கற்பித்தார். நான் மிக விரும்பிப் படித்த பாடங்களுள் மூலபாடத் திறனாய்வும் ஒன்று. நூற்பதிப்பு வரலாற்றிலே தொடங்கிப் பதிப்பு முறையியலை விளக்கிச் செல்லும்போது சி.வை.தா, உ.வே.சா. முதலியோரைப் பற்றியும் அவர்களது பதிப்பு முறைமை பற்றியும் ஒப்பிட்டுக் கூறி விளக்கியமை எமது ஆளுமை விருத்திக்கு அத்திபாரமாக அமைந்தது. இன்றும் அந்தத் துறையிலே பயணிக்க அவரது விரிவுரைகளே மூலகாரணமாயின. நாவலரின் பதிப்புப் பணியின் சிறப்பினையும் அவரின் ஆளுமையையும் பாராட்டி வியந்து கற்பித்தார். மூலபாடத் திறனாய்வு விரிவுரையின்போது நான் கூறிய அபிப்பிராயங்களையும் பாராட்டியமை என் நினைவுத் திரையிலே படமாகப் பதிந்திருக்கிறது. பொதுவாக அவர் கற்பித்த பாடங்கள் யாவும் படமாக என் நினைவுத்திரையில் இன்றுவரை நின்று நிலைக்கின்றன.

பலத்த வேலைப்பளுவுக்கு மத்தியிலும் கல்விசார் நடவடிக்கைகளிலே மிகுந்த கவனம் செலுத்தினார். நாவலர் நூற்றாண்டு விழா, நாட்டார் வழக்காற்றியல் விழா, பாரதி நூற்றாண்டு விழாவுக்கான முன்னோட்ட நிகழ்ச்சிகள் என்பவற்றோடு நாவலர் நூற்றாண்டு விழா மலர், இன்னும் சிறுசிறு கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்று ஏதாவது ஒன்று நடந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு புதன்கிழமை பின்னேரம் ஏதாவது ஒரு கூட்டம், கலந்துரையாடல் இருந்தே தீரும். எமது கல்வி, அறிவு, ஆளுமை விருத்திக்கு அவை தீனிபோட்டன.

நான் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்ற பின் அவருடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. 1981 தொடக்கம் 1983 வைகாசி வரை இராஜவீதியிலே கைலாசபதி வீட்டுக்கு (இன்றைய கோப்பாய் பொலிஸ் நிலையம்) அருகில் அன்னை இல்லம் என்ற வீட்டிலேதான் குடியிருந்தேன். மாலை வேளையிலே தினமும் அவர் வீட்டுக்குச் சென்று உரையாடுவேன். இலக்கியம், மொழி, விமர்சனம், அரசியல், சுய அனுபவங்கள் என எமது உரையாடல் விரிந்து பரந்து செல்லும். இந்தக்காலத்திலே நான் அவரிடம் பலவற்றைப் பெற்றுக்கொண்டேன்.

என்னைக் கண்டதும் என்ன படித்தாய், என்ன வாசித்தாய் என்றுதான் முதலிற் கேட்பார். நான் படித்ததை, வாசித்ததைச் சொல்லுவேன். இவற்றையெல்லாம் எழுது என்று கூறுவார். அவரின் நெறிப்படுத்தலிலேதான் நான் முதுமாணிப்பட்ட ஆய்வை மேற்கொண்டிருந்தேன். சுன்னாகம் 'அ.குமாசுவாமிப்புலவர் ஓர் ஆய்வு' என்பதுதான் எனது ஆய்வேட்டின் தலைப்பு. எமக்காக ஆய்வுநெறி முறை வகுப்பு ஒன்றையும் ஒழுங்குசெய்து மூத்த பேராசிரியர்களை வளவாளர்களாக நியமித்து நடத்தினார். அந்த வகுப்பு மூலம் நாம் ஆய்வுநெறிமுறைகள் பற்றி நிறைய அறிந்துகொண்டோம்.

* * *

ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறைக்கு உன்னை ஆற்றுப்படுத்துவதற்காகவே இந்தத் தலைப்பைத் தந்தேன் எனக் கூறி இவர்களைப் போய்ச் சந்திக்கவேண்டுமென்று ஒரு பட்டியலையே தந்தார். குமாரசுவாமிப்புலவரின் மகன் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, ச.அம்பிகைபாகன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கா.சி.குலரத்தினம், கலாநிதி சு.ஜெபநேசன், ஆயர்சபாபதி குலேந்திரன், இணுவில் அன [illegible] மட்டுமே [illegible] ரயும் அடிக்கடி சந்தித்தேன். இதனாலே ஈழத்து இலக்கிய வரலாற்றின் 19ஆம் நூற்றாண்டு என் கைவசமானது. இரண்டு இயல்கள் எழுதிய நிலையிலே கைலாசபதி காலமானார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சு.வித்தியானந்தனின் வழிகாட்டலிலே முதுதத்துவமாணியைச் செய்துமுடித்தேன்.

எழுது எழுது என்று தூண்டுவார். நான் எழுதிய கட்டுரைகளை வாங்கிப் படித்துத் திருத்தித் தருவார். அவை இன்றும் என்னிடம் இருக்கின்றன. கல்வி ஆய்வு முயற்சிகளில் மாணவர்களை ஊக்குவிப்பதற்குக் கைலாசபதியைப் போல நான் வேறு ஒருவரையும் காணவில்லை. எனது ஆய்வு முயற்சிக்குப் பல்வேறு வகையிலே அவர் உதவிசெய்தார். பல உதாரணங்கள் உளவேனும், ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். 1982ஆம் ஆண்டு (அவர் இறந்த ஆண்டு) என்னை அழைத்து, முகாந்திரம் தி.சதாசிவஐயரும், பாரதி பிறந்த ஆண்டுதான் (1882) பிறந்தார். அவரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதும்படி கூறினார். எழுதிக் காட்டினேன். அதைத் திருத்தித் தானே உறையிலிட்டு முகவரி எழுதித் தினகரனுக்குத் தன் கையாலேயே அனுப்பினார். அடுத்த கிழமை அந்தக் கட்டுரை தினகரனிலே வெளிவந்தது. இப்போதும் அந்தப் பத்திரிகை என்னிடம் உள்ளது. இப்படி அவர் என்னை வளர்த்தெடுக்கப் பல உதவிகளைச் செய்தார்.

நகைச்சுவையாகப் பேசுவதும் நகைச்சுவைகளை இரசிப்பதும் அவரின் இயல்பு. கிராமியப் பேச்சுவழக்கை, உரையாடல்களை நன்கு இரசித்துப் பின் அதை மீளவும் சொல்லிக்காட்டுவார். அதற்கு உதாரணத்தைக் கூறலாமென்று விரும்புகிறேன். கைலாசபதியும் நானும் இடைக்கிடை ஒன்றாகச் சைக்கிளில் கல்வியங்காட்டுச் சந்தைக்கு மீன் வாங்கச் செல்லுவோம். அவருடன் நின்றுகொண்டு ஒரு மீனைக்காட்டி அந்த மீன் விற்கும் பெண்ணிடம் இது என்ன மீன் என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண், இது என்ன மீனோ? 'கடலிற் கரும்பெல்லோ' என்று கூறினார். அதனை நன்கு இரசித்த கைலாசபதி அடிக்கடி கடலிற்கரும்பு வாங்கப் போவோமா? என்றுதான் கேட்பார். இன்னொருநாள் மீன்சந்தையிலே மீன் விற்கும் பெண்ணிடம் இது நல்ல மீனோ என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண் என்னைப் பார்த்துத் 'தண்ணீருக்குள் விட்டால் ஓடும், உசிர்மீன்' என்றாள். இருவரும் சைக்கிளில் வரும்பொழுது வீதியோரத்தில் வெள்ளம் நின்றது. கைலாசபதி என்னைப் பார்த்துக் கவனமாகக் கொண்டு வா, வெள்ளத்துக்குள் விழுந்தால் ஓடிவிடும் என்று கூறிச் சிரித்துக்கொண்டு வந்தோம். இப்படியான சம்பவங்களை அவரது இரசனை உணர்வையும் நகைச்சுவை உணர்வையும் வெளிப்படுத்தச் சுட்டிக்காட்டலாம்.

அவருக்கு நோய் வந்து கொழும்புக்குப் போகும்போதும் என் வீட்டுக்கு வந்து ஸ்கூட்டரையும் விட்டுவிட்டு, மு.வை. அரவிந்தன் எழுதிய உரையாசிரியர்கள் என்னும் நூலையும் தந்து, எம்.ஏ. முடிய நீ ஈழத்து உரையாசிரியர்கள் பற்றித்தான் கலாநிதிப்பட்ட ஆய்வு செய்யவேண்டுமென்று பணித்தார். அத்துடன் இரண்டு வாரத்துக்கு லீவுக்கடிதத்தையும் எழுதி, அதைப் பேராசிரியர் இந்திரபாலாவிடம் கொடுக்கும்படியும் கூறிச்சென்றவர்தான் திரும்பி வரவில்லை.

1982 மார்கழி மாதம் ஆறாம் திகதி மாலைவேளை கொழும்பு மருத்துவமனையில் அவர் உயிர் பிரியும் வேளையிலே நானும் கூட நிற்கிறேன். அவரின் குடும்பத்தினர் யாவரும் நிற்கிறார்கள். அவரது மைத்துனர் பொன்னம்பலம் உடனே என்னை யாழ்ப்பாணம் போகும்படியும் போய்ப் 'பாட்டாவை' (கைலாசபதியின் தகப்பனை) ஆறுதல்படுத்தி ஆவனசெய்யும் படியும் அனுப்பிவைத்தார். தமிழியல் ஆய்வுமலையொன்று சரிந்த துயரத்தைச் சுமந்துகொண்டு யாழ்ப்பாணம் நோக்கிய பஸ் புறப்பட்டது.

கைலாசபதியின் இழப்பின் துயரம் என்னிடமிருந்து இன்னும் முற்றாக நீங்கவில்லை. அவர் இருந்திருந்தால் நான் பலவற்றைச் சாதித்திருப்பேன் என்ற ஏக்கம் என்னிடம் உண்டு. கைலாசபதி இறந்தபோது பலர் அஞ்சலிக் கவிதைகள் எழுதினார்கள். வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய கவிதையின் ஒரு வரியை நான் அடிக்கடி நினைப்பேன். 'நெடும் பனை வீழ்ந்து விட்டால் வடலிதானே பனை' கைலாசபதியின் பொன்னுடலம் கனத்தை பொதுமயானத்திலே தீயுடன் சங்கமமாகும் பொழுது சில்லையூர்ச் செல்வராஜன் ஒரு கவிதை வாசித்தார். கூடியிருந்த அனைவரின் கண்களும் குளமாயின. கைலாசபதியின் மறைவு குறித்துப் பண்டிதர் க.வீரகத்தி எழுதிய பாடலடி ஒன்றினை நினைவுகூர்ந்து இக்கட்டுரையை நிறைவுசெய்ய விரும்புகின்றேன்.

**ஓயாமல் எழுதுபவர் படிப்பவர்கள் எல்லாம்**
**ஒருநாளும் கைலாசபதியானதில்லை.**

பல்கலைக்கழகத்திலே கைலாசபதியின் தமிழியல் நாற்காலி இன்றுவரையும் காலியாகவே இருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளித்தர கண்காணிப்பு நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ்.மாநகரசபையால் பழைய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வளித்தரக் கண்காணிப்பு நிலையம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணி வண்ணனால் திறக்கப்படவுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜெயசிங்கவின் வழிகாட்டலில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆதரவுடன் வளித்தரக் கண்காணிப்பு நிலையம் பழைய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது. (எ-14)

# பாரதியார் விழா

யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 140ஆவது பிறந்ததின நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் 'பாரதி நம் நெஞ்சில் ஆழப் பதிவது பக்திக் கவிதைகளாலா? சமூகக் கவிதைகளாலா?' என்ற சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

இதன்போது பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன், இ.வாசுதேவா, ந. விஜயசுந்தரம், செந்தமிழ் சொல்லருவி க.லலீசன் ஆகியோர் பங்குபற்றி வாதங்களை முன்வைக்கவுள்ளனர்.

தொடர்ந்து நீர்வேலி பொன்சக்தி கலா கேந்திரா மாணவர்களின் பாரதி பாடல் நடனமும் இடம்பெறும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ச)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை - புத்தூர் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்தல் - 2023

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பின்வரும் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ❖ அரிச்சுவடி முன்பள்ளி – ஆவரங்கால்
- ❖ கஜமுகன் முன்பள்ளி – அச்சுவேலி
- ❖ சிகரம் முன்பள்ளி – இருபாலை

எம்மால் நிர்வகிக்கப்படும் குறித்த முன்பள்ளிகளில் எவ்வித கட்டணங்களும் இன்றி, முற்றிலும் இலவசமாக கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாணவர்களுக்கு இலவச சத்துணவுகளும் வழங்கப்படுகின்றது. நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய முன்பள்ளிகளாக (Smart Preschool) இயக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் முன்பள்ளிகளில் தமது பிள்ளைகளை இணைத்துக்கொள்ள விரும்புவோர் குறித்த முன்பள்ளிகளிலும், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், உபஅலுவலகங்கள், பொது நூலகங்கள் என்பவற்றில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை குறித்த முன்பள்ளிகளில் நேரடியாக 28.12.2022 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

06.12.2022

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

(CR 38683)(3/6)

## மணமகள் தேவை


1978 இல் பிறந்த சதய நட்சத்திரம் 16 3/4 கிரக பாவமுடைய 11 இல் செவ்வாய் உள்ள 9 இல் சூரியன் உள்ள சுய தொழில் புரியும் விவாகரத்து ஆன மணமகனுக்கு நற்குணமும் சைவ போசனமுடைய மணமகள் தேவை.

தொடர்பு: 077 908 4823

(CS 48937) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 • 01 • 1932



மறைவு
06 • 12 • 2022

### கதிரித்தம்பி வேலும்மயிலும்

(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)

அரசொல்லை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கோவில் வாசல் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரித்தம்பி வேலும்மயிலும் நேற்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா - பூரணம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகையா, சின்னராசா மற்றும் சிவக்கொழுந்து காலஞ்சென்ற தில்லையம்பலம், வீரங்சிங்கம், துரைராசா மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் மற்றும் காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லோகேஸ்வரன் (தொழிலபதிர்), தைவாணி (ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி), சிவாஜினி (ஆசிரியர், யா/ மயிலிட்டிகலைமகள் ம.வி), சிவலோஜினி (ஆசிரிய ஆலாசகர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம், இணைப்பு வலயக்கல்வி அலுவலகம் கிளி. தெற்கு), வதனி (ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்.), இளங்கோ (அதிபர், யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), கமலராஜன் (வலயக்கல்வி பணிப்பாளர், கிளி.தெற்கு) காலஞ்சென்ற Dr. ரகுபதி (பொது வைத்திய நிபுணர், தெல்லிப்பளை, ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டிலோசன் (மாணவன் IIT), பிரியந்தன் (மாணவன் யா/ இந்துக்கல்லூரி), ஹாரினி (மாணவி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அபிநயன் (உற்பத்தி முகாமையாளர், Hemsons), ஆரதி (மாணவி, யாழ். மருத்துவபீடம்), இளங்கீதன் (மாணவன், - ஜெயவர்த்தனபுர மருத்துவ பீடம்), மிகுந்தன் (மாணவன், Junior Smart Center), அகர்சை (மாணவி, கிளி / மத்திய ஆரம்ப வித்தியாலயம்), கோவர்த்தனன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), திருவகன் (மாணவன், யா/ இந்துக்கல்லூரி), ஜதுகுலன் (மாணவன், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


கோவில் வாசல்,
இணுவில்.

(CS 48004)(3/6)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
09 - 05 - 1945



இறப்பு
05 - 12 - 2022

### திருஞானசம்பந்தன் சரவணபவானந்தன்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தன் சரவணபவானந்தன் கடந்த (05.12.2022) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தன் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானசேகரம் ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், இராமச்செல்வியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஹரிகரன் மற்றும் உமாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபானியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராமலிங்கம் (பிரான்ஸ்) மற்றும் குலமணி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற பஞ்சலிங்கத்தின் சகோதரனும் ஆவார். .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

074 102 7671
0049 176 259 53646

தகவல் :
மனைவி, மகன்

(CS 48022 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்நியச்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற '2022ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பொருளாதார மாநாட்டில்' வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2050ஆம் ஆண்டை எதிர்கொள்ளும் வகையில் வலுவான புதிய பொருளாதார முறைமையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொருளாதார மறுசீரமைப்புக்கு மேலதிகமான பணி. பழமையான பொருளாதார முறைமையை கையாள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது. இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தேவைப்படுவது வெளிநாட்டு அந்நியச்செலாவணியே. இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவேண்டுமாயின், கடன் மீளச் செலுத்துவதை மறுசீரமைக்கவேண்டும். மிகத் திருத்தமான பொருளாதார முறைமையொன்று அறிமுகம் செய்யப்படவேண்டும். இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும். அடுத்த வருடம் மின்சக்தித் துறைக்கு மாத்திரம் 300 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது. இதனால் இந்தச் செலவை மீளப் பெற்றக்கொள்வதற்கான மாற்றுவழிகளைத் தேடவேண்டும். வலுச்சக்தி துறையில் புதிய மாற்று சக்திகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ம)

## பொதுக்கூட்டம்

மாவைக்கந்தன் சிக்கனகடனுதவுகூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம், மாவை மத்தி சனசமூக நிலையத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.நாகேஸ் வரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

## துணுக்காய் பிரதேச சபை
## 2023 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை. ஆட்டிறைச்சிக்கடைகள். மாட்டிறைச்சிக்கடைகள். கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 06.12..2022 - 20.12.2022 (அலுவலக நாட்களில் மு.ப8.30-பி.ப 3.00) |
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : 20.12.2022 ந.ப 12.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | : 20.12..2022 பி.ப 01.00 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | : 20.12..2022 பி.ப 2.00 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | : துணுக்காய் பிரதேச சபை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர். துணுக்காய் பிரதேசசபை. துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். முல்லைத்தீவு " என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 23000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 256,500.00 | 2,500.00 | 500.00 |
| 05 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 1,022,000.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக் கடை | ஜயன்கன்குளம் | 13,800.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஜயன்கன்குளம் | 119,500.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 13,800.00 | 1,500.00 | 500.00 |

### பொதுசந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 26,800.00 | 1,500.00 | 500.00 |
| 02 | ஜயன்கன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஜயன்கன்குளம் | 26,350.00 | 1,500.00 | 500.00 |
| 03 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,451,000.00 | 1,500.00 | 500.00 |


### நியந்தனைகள்:

01. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
04. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
05. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
06. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
07. இறைச்சிக்காக ஆடு . மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
08. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
09. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

அ.அமிர்தலிங்கம்
தவிசாளர்
பிரதேச சபை, துணுக்காய்.

(CR 38681)(3/6)

## ஆறாம் ஆண்டு நினைவு அலை



கண்மகிழ 05.07.1936 — கண்நெகிழ 17.11.2016

புகுந்த மண்ணை நேசித்த கலைமகளின் கலைச்சிகரம்

## அமரர் தில்லை சின்னையா

திதி : பிரதமை (07.12.2022)

ஆறாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உன் நினைவு இன்றும் எம்மனதில்
சமூகத்தில் நற்பிரசைகளாக எம்மை
வாழ வைத்த தெய்வமே நீங்கள்
வெள்ளிக்கிழமை வந்தால்
பழனி ஆண்டவர் வாசல்
தங்களை வரவேற்கும்
அல்வை ஆலடியான் உற்சவத்தில்
வெள்ளை வேட்டியுடன்
உற்சாகமாய் வீற்றிருப்பாய்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'கவிதாலயா'
15, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

தங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

(CS 47978) (3/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 06 09 1939 — இறப்பு 06 12 2022

## திருமதி. தெய்வநாயகி வைத்தியநாதன்

தொல்புரம். ஆணைப்பந்தி வளவை பிறப்பிடமாகவும் இல.15. 4/2. கனல் லேன். வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தெய்வநாயகி வைத்தியநாதன் 06.12.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் தொல்புரம் காலஞ்சென்ற சண்முகம். சிதம்பரநாச்சியார் தம்பதியினரின் அன்பு மகளும். விஸ்வநாதன் மாரிமுத்துப்பிள்ளையின் மருமகளும். காலஞ்சென்ற வைத்தியநாதனின் (முன்னாள் ஆசிரியர் . பதில் அதிபர் - இரத்மலானை இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும். விஸ்வநாதன். அருணா (அனுஷா). கவிவாணன் ஆகியோரின் அன்புத் தாயும். குமுதினி. ஜெகநாதன். பகீரதி ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்ற சண்.கந்தையாவின் அன்புச்சகோதரியும். காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் மற்றும் மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனியும். தாமரா. ஹர்சித் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை 08.12.2022 காலை 8.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் ஈமைக்கிரியைகள் இடம் பெற்று பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.15,4/2, கனல் லேன் வெள்ளவத்தை
0773548787 / 0778177491

தகவல் - பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு பிற்போடல் தொடர்பானது

மலர்வு 27 . 01 . 1972

உதிர்வு 08 . 11 . 2022



## அமரர் பரமநாதன் சத்தியசீலன்

(சீலன்)

08.12.2022 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருந்த அமரர் பரமநாதன் சத்தியசீலன் (சீலன்) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அதன் பின் நடைபெற இருந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். வீட்டுக்கிருத்திய கிரியைகளுக்கான திகதி பின்னர் அறியத்தரப்படும்.

**குடும்பத்தினர்**

**சிவா ரேடிங் கம்பனி (கொழும்பு - யாழ்ப்பாணம்)**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடஸ் - யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இல : 077 776 8835**

(CS 48020 ) (3/6)

## பூநகரி பிரதேசசபை
## பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல் அறிவித்தல் 2023

05.11.2022 ஆம் திகதி அன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலுக்கு மேலதிகமாக,

பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2023 ம் ஆண்டிற்காக 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு மீள் கேள்வி கோரல் மூலம் பொருத்தமான நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | :- 08.12.2022 – 14.12.2022 |
| மீள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | :- 15.12.2022 மு.ப 3.00 மணி வரை |
| மீள் கேள்வி நடைபெறும் திகதி | :- 16.12.2022 |
| மீள் கேள்வி நடைபெறும் நேரம் | :- 2.00 PM |
| மீள் கேள்வி நடைபெறும் இடம் | :- பூநகரி பிரதேச சபை |

மீள் கேள்வியில் பங்குபற்ற விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து பிரதேச சபையில் கையளிப்பதன் மூலம் தங்களது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இவ்விடயம் தொடர்பாக வாடியடி பூநகரியில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் தாங்கள் நேரடியாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ நிர்ணயிக்கப்பட்ட இறுதித் தொகைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.


**தொடர்பு :- 021 206 0856,**
**021 228 2666**

| பொதுச் சந்தைகள் | தரிப்பிடம் | கருவாட்டுக் கடைகள் | மாட்டிறைச்சிக் கடைகள் | கோழி இறைச்சிக் கடைகள் | ஆட்டிறைச்சிக் கடைகள் | மலசலகூடம் |
|---|---|---|---|---|---|---|
| வாடியடி | வாடியடி | வாடியடி | நாச்சிக்குடா கடற்கரை | ஜெயபுரம் | வாடியடி | முழங்காவில் |
| முட்கொம்பன் | முழங்காவில் | பள்ளிக்குடா | | வாடியடி | பள்ளிக்குடா | |
| ஜெயபுரம் | சாங்குப்பிட்டி | கிராஞ்சி | | கிராஞ்சி | ஜெயபுரம் | |
| கிராஞ்சி | | நாச்சிக்குடா சந்தி - 01 | | | கிராஞ்சி | |
| வலைப்பாடு | | நாச்சிக்குடா சந்தி - 02 | | | முழங்காவில் | |
| 19ம் கட்டை | | | | | | |
| நாச்சிக்குடா கடற்கரை | | | | | | |

**சிவகுமார் ஸ்ரீரஞ்சன்**
**தவிசாளர்**
**பூநகரி பிரதேச சபை.**

(CR 38682)(3/6)

# மரண அறிவித்தல்



## திரு. வேலுப்பிள்ளை நடராசா

(தலைவர்– அச்செழு சிவகாமி அம்மன் ஆலயம்)

அச்செழு மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை நடராசா 02.12.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை செல்லாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் ஆசை கணவரும், கோபிகரன் (லண்டன்), தயாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவாகரன், மற்றும் நவகரன் (கனடா), கருணாகரன், சுசிகரன் (அவுஸ்ரேலியா), மதுரா (குடியேற்ற உத்தியோகத்தர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), சுமித்திரா, சுசகரன், காலஞ்சென்ற சத்திராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சரண்ஜா (லண்டன்), டினோதா(கனடா), மதுரா (அவுஸ்ரேலியா), கோபிநாத் (வேலைகள் அத்தியட்சகர்- வவுனியாப் பல்கலைக்கழகம்), சண்சயின் (சயன், உறுப்பினர் - வலி கிழக்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சமித்தா, லிஷான், ஆதிரா, மிதுஷ்ஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், பரமேஸ்வரி, மகேஸ்வரன், இராமநாதன், சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சரோஜினிதேவி, மற்றும் சாந்தினிதேவி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் தியாகலிங்கம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2022 வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இத் தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தோற்றம் 07.05.1937**

**மறைவு 02.12.2022**

விதானைவளவு
அச்செழு மத்தி,
நீர்வேலி.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**77 0869670**

(CS 48020) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை...

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான நேற்றையதினம் மாலை வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று வள்ளி, தெய்வானை சமேதராக கைலாச வாகனத்தில் சுவாமி எழுந்தருளினார். தொடர்ந்து ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நல்லூர் முருகப் பெருமான் வெளிவீதியுலா வந்தார். (அ-ம-27)

## தமிழர்களுக்கான...

தீர்வைப் பெறலாம் என்ற மனநிலையில் இருந்து தமிழ்க் கட்சிகள் மாறவேண்டும் - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு உட்பட தேசிய ரீதியில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் விரைந்து தீர்வுகாண வேண்டும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். எனவே, இதைக் கவனத்திற் கொண்டு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் செயற்படவேண்டும். சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று தமிழ்க் கட்சிகளிடம் மீளவும் கேட்டுக்கொள்கின்றேன்' - என்றார். (அ-ம-22)

## ரணிலுடன்...

அரசியல் எதிர்காலம் இல்லாமற் போய்விடும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஜித் பிரேமதாஸ தன்னைத் திருத்திக் கொண்டு ஜனாதிபதியுடன் மீண்டும் இணையவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். தனித்துப் பயணிக்க முடியாது என்பது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்களுக்கும் தெரியும். எனினும், குழப்பம் விளைவிக்கும் ஒரு சிலர் உள்ளனர். அவ்வாறு ரணிலுடன் இணைந்து பயணிக்காவிட்டால் சஜித்தின் அரசியல் எதிர்காலம் இல்லாமற்போய்விடும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைவதற்குத் தயாராகவே உள்ளனர். எனினும் அவ்வாறான உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது இன்னும் ஒரு வாரத்துக்குள் தெரியவரும்' - என்றார்.

(அ-ம-44)

## கடன்...

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மற்றும் உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் ஆகியோரை இந்த வாரம் சீனத் தலைநகர் பீஜிங்குக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டு, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் உதவியைக் கோரியுள்ள பெரும்பாலான நாடுகளின் பிரதான கடன் வழங்குநராக சீனாவே இருக்கின்றது. இதனால், அந்த நாடுகளின் கடன் மறுசீரமைப்புக்குச் சீனாவின் சம்மதம் முக்கியமாகத் தேவை. ஆதலால், இந்தக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சீனா காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கடந்தவாரம் உலக வங்கியாலும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே இது தொடர்பில் அடுத்தகட்டப் பேச்சுக்காக பீஜிங் வருமாறு அவர்களை சீனா அழைத்துள்ளது. (ம)

(தொடர்புடைய செய்தி உள்ளே)

## நலிவு...

உதவிகளையும் கோரியிருந்தது. இதில் சர்வதேச அபிவிருத்திச் சங்கமும் ஒன்றாகும். சர்வதேச அபிவிருத்திச் சங்கம் இலங்கைக்கு உதவவேண்டுமாயின் அதற்கு உலக வங்கியின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். ஏனெனில் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் தாய் அமைப்பாக உலக வங்கியே இருக்கின்றது. இந்த நிலையில், இலங்கையின் நலிவு நிலையையும் நிதியுதவியின் தேவைப்பாட்டையும் உலக வங்கி அங்கீகரித்துள்ளது. இதனால், சர்வதேச அபிவிருத்திச் சங்கம் இலங்கைக்கு உதவுவதற்கான சந்தர்ப்பங்கள் தற்போது பிரகாசமாகியுள்ளன.

சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் நிதி உதவியின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் சந்தர்ப்பம் ஏற்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ம)

## விவசாய...

பதியான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாய நடவடிக்கைகளுக்கான பயிர் விதை விநியோகத்தில் பெரும் தட்டுப்பாடு காணப்படுகிறது. காலநிலை மற்றும் மண்வளத்துக்கு உகந்த பயிர்கள், விதைகள் சந்தையில் விநியோகிக்கப்படுவதில்லை. தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை தற்போது முழுமையாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் உணவுப் பாதுகாப்பு எந்த நிலையில் காணப்படுகிறது என்பதைப் பற்றி புதிதாகக் குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது.

உணவுப் பாதுகாப்புக்கு உரிய சட்டம் இதுவரை இயற்றப்படவில்லை. உணவுப் பாதுகாப்புக்கு விரைவான தீர்வு எடுக்காவிட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

விலங்குகளால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் விளைவுகள் தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். நாட்டில் உரத் தட்டுப்பாடு இல்லைஎன அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், அது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாக உள்ளது. சந்தையில் உரம் ஒவ்வொரு விலையில் காணப்படுகிறது. நெல்லுக்கான உத்தரவாத விலை இல்லாத காரணத்தால் விவசாயிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நெற்பயிர்ச்செய்கை உற்பத்திக்கான செலவுக்கும், நெல் சந்தைப்படுத்தல் சபை நிர்ணயிக்கும் விலைக்கும் இடையில் பெரியளவு காணப்படுகிறது. ஆகவே விவசாயிகள் திருப்தியடையும் வகையில் நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்கவேண்டும்.

விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழு நாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர்கொண்டுள்ளார்கள். விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு விரைவான தீர்வை காணாவிட்டால் நாடு மிக மோசமான எதிர்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (அ-ம)


31St Day Remembering



In loving memory of



DR ANTON SANTHIYAPILLAI

29.11.1940 - 06.11.2022

You will never be forgotten and will live on in our heart


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர் இரகுநாதன் காலமானார்

யாழ்., டிசெ. 7 ஊடகவியலாளர் பா.இரகுநாதன் நேற்று தனது 70ஆவது வயதில் காலமானார். பருத்தித்துறை, ஆத்தியடியைச் சேர்ந்த இவர் உதயன் நாளிதழில் பல ஆண்டுகள் ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்த நிலையில், மூப்பின் காரணமாக பணியில் இருந்து ஓய்வெடுத்திருந்தார். கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர், சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்ந்தார். இவரது இறுதிக்கிரியைகள் புலோலி, காரைதீவில் நேற்று மதியம் நடைபெற்றது. இறுதி நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ம-173)


## புதன் ஸ்பெடில்

அப்பம் - மதிய மரக்கறி உணவு
2:1 இலவசம்
யாழ். பாடி விடுதி / உணவகம்
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
021 222 6868, 077 734 0026
(CS 48023)(3/6)

## காணி, தென்னங்கன்று விற்பனைக்கு

- யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட A.V. றோட்டில் 5 பரப்பு வெற்றுக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 22 லட்சம்)
- வருட இறுதி விழாக்களை முன்னிட்டு 3.5 வருட தரமான தென்னங்கன்றுகள் மலிவான விலைக்கு உண்டு.

076 219 5666, 070 566 8015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




17th General Convocation of Wayamba University of Sri Lanka - 2022 இல் நடைபெற்ற பொது பட்டமளிப்பு விழாவில் கந்தசாமி திருப்பதி (விடத்தற்பளை) மற்றும் கதிரவேலு - பூமணி (கைதடி) தம்பதியரின் சிரேஷ்ட பேரன்

### தவசொரூபன் புருஷோத்தம

Bachelor of Engineering Technology Honours in Construction technology with Second Class (Lower Division) பட்டம் பெற்று எமக்கு பெருமை சேர்த்த எமது மூத்த பேரனை பாராட்டி வாழ்த்து வதையிட்டு பேருவகை அடைவதோடு அவர் மேன்மேலும் பல உயர்வை பெற எல்லாம் வல்ல விடத்தற்பளை வேம்பிராய் சந்திரசேகர பிள்ளையாரையும் கைதடி கிழக்கு வீரமகா காளி அம்மனையும் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
திருப்பதி (அப்பம்மா), கதிரவேலு (தாத்தா)
(CS 22113)(3/6)

## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L புதிய கல்வியாண்டு 2024

- திகதி 10.12.2022 (சனிக்கிழமை)
- நேரம் : காலை 7.30

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும்
5ஆவது முறையாகவும்
98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

077 017 5346
(C-5630)

## INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Investment & Promotion & Information Technology

MPCS Building
127,K.k.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

JANUARY BATCH

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in information Technology
- Dip.in Computer Programming

Online Course

- Dip.in PC Application & Office Management -06 Month-

Languages

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AotoCAD

-06 Month-

Workshops

- Internet & e-mail
- Webpage Designing & Development -20 hours-

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 20.01.2023
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 21.01.2023

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer -

## கண்ணீரில் கரைந்த ஈராண்டு நினைவஞ்சலி

உலகெலாம் ஒளிரும் திருக் கார்த்திகை நாளில் அணைந்துவிட்ட எமது ஆருயிர் மகள்



### அமரர் தர்ஷினி ஜெயரட்ணம்

Dip.in English
(பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை - யா/வேலணை சின்னமடு மகாவித்தியாலயம்,
முன்னாள் ஆசிரியை யா/ வேலணை மத்திய கல்லூரி
யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்,
யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,

மலர்வு 03.08.1977 உதிர்வு 30.11.2020

கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகைநாள்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

'ஈராண்டு கடந்துசென்ற - உன் நினைவால் கண்ணீரில் கரைந்து உருகும்....'

லோட்டன் வீதி, மானிப்பாய்.
(07.12.2022)
குடும்பத்தினர்.
(CS 22108)(3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 140 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.